**தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடந்த வருடத்தின் இறுதியில் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம், சொத்துக்கள் ரூபா 139,818,456 ஆன போதிலும், மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 341,589,114 கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் ரூபா 201,771,456 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதியல்லாத சொத்து மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆண்டினுள் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகை 2018.12.31 ஆந் திகதி உள்ள மீதியுடன் கூட்டப்பட்டமையால், 2019.01.01ஆந் திகதியில் உள்ளபடியான மீதி உருவாகியுள்ளது. 2020.12.31ஆந் திகதியின் பின்னர் ஆரம்ப மீதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்க முடியாமையால் இந்த வழு 2021ஆம் ஆண்டின் பின்னர் திருத்தப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான முற்பணக் கணக்குகளின் விபரங்களின் பிரகாரம், (ஏசீஏ 5) முற்பணப் பெறுவனவுகள் ரூபா 20,885,578 ஆன போதிலும், திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம், முற்பணப் பெறுவனவுகள் ரூபா 22,473,336 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், ரூபா 1,587,758 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2019 திசெம்பர் 03ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பரீட்சை மீதியை அடிப்படையாக கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ACA – 5 படிவத்திற்கான தகவல்கள் திறைசேரியின் அச்சீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7ஆம் பந்தியின் (vi) பிரிவின் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020ஆம் ஆண்டு முதல் கட்டுநிதி இணக்க கணக்கினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிச் செயலாற்றல் அறிக்கைக்கு ஏனைய மூலங்களிலிருந்தான பெறுவனவுகள் உள்ளடக்கப்படக்கூடாத போதிலும், ரூபா 17,072,556 ஆன ஏனைய மூலங்களிலிருந்தான பெறுவனவுகள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2010ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இந்த பெறுவனவுகளை வெவ்வேறாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 10,085,025 நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2020ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருமானமல்லாத பெறுவனவுகள் உறித்த இடத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம், மூலதனச் சொத்துக்களை கைப்பற்றுதல் ரூபா 79,927,923ஆன போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ 5) ஆண்டினுள்ளான கொள்வனவுகளாக ரூபா 5,884,363 மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந்த கூற்றுக்களிடையே ரூபா 74,043,560 ஆன வேறுபாடொன்று நிலவியது. மேலும், காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அந்த செலவினம் ரூபா 12,976,069 ஆக காணப்பட்டது. | - மேற்படி - | இந்த திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்த மூலதனச் சொத்துக்கள் மாத்திரம் இந்த மாதிரியின் தரவுகளின் மூலம் புலப்படுத்தப்படுகின்றது. எனினும், நிர்மாணம் பணிகள் அனைத்தும் மற்றும் ஏனைய கொள்வனவுகளும் நிதியேற்பாடுகளை விடுவிப்பதன் மூலம் வெளிவாரி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுவதுடன், இங்கு குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் அவ்வாறு நிதியேற்பாடுகள் விடுவிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்கள் ஆகும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 212,500 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானமல்லாத பெறுவனவுகள் சரியாக சீராக்கம் செய்யப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | கட்டிடங்கள் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுவந்த உத்தியேகத்தர் ஒருவரின் கடன் மீதியை தீர்த்தலானது தவறுதலாக |

| | | | |
|---|---|---|---|
| | | | அந்த திணைக்களத்தின் தலைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த ரூபா 212,500 மீதியை அந்த சந்தர்ப்பத்திலேயே திருத்தியமையால் அந்த வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தது. |
| (ஆ) | பரீட்சை மீதியின் பிரகாரம் ஆளனி வேதனம் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களுக்காக ஆண்டினுள் ரூபா 228,613,687 செலவிடப்பட்டிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளனி வேதனம் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களுக்காக ரூபா 248,246,500 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 19,632,813 ஆல் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03ஆந் திகதிய 271/2019ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அந்த வேறுபாடு முற்பண B கணக்கிற்குரிய செலவினமாவதுடன், அந்த பெறுமதியும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பரீட்சை மீதியின் பிரகாரம், ஆண்டினுள் முற்பண பீ கணக்கின் கீழ் அறவிடப்பட்டிருந்த ரூபா 22,473,337 மற்றும் முற்பணச் செலுத்தல்களின் அளவான ரூபா 19,845,313 முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்கள் மற்றும் செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல்களாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | எதிர்காலத்தில் உரிய மாதிரிக்கமைய தகவல்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொண்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(அ) இன் பிரகாரம், வருடாந்த மதிப்பீடுகள் இயலுமான அளவில் துல்லியமானதாகவும் முழுமையாகவும் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பான போதிலும், திணைக்களத்தின் 44 செலவின விடயங்களுக்குரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 265,363,770 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 91,856,497 சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது தேறிய நிதியேற்பாட்டில் 34.6 சதவீதமாகும். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், மதிப்பீடுகள் இயலுமான அளவில் துல்லியமானதாகவும் முழுமையாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். | திணைக்களத்தில் தாக்கம் செலுத்தும் நிர்வாக விடயங்கள் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செலவினம விடயங்களில் சேமிப்புகள் இடம்பெற்றுள்ளமையை ஏற்றுக்கொள்வதுடன், எதிர்காலத்தில் அந்நிலைமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 09 மீண்டெழும் செலவினம விடயங்களுக்கு மாற்றப்பட்ட அளவுகளில் 08 சந்தர்ப்பங்களில் சேமிப்புகள் மாற்றப்பட்ட சந்தர்ப்பங்களில் 8 சதவீதம முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் | அத்தியாவசியமான செலவினங்களுக்காக மாத்திரம் நி.பி.66 இன் கீழான மாற்றல்களை மேற்கொள்வதற்கு மற்றும் உரிய செலவினங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களி அத்தியாவசியமான பணிகளை நிறைவேற்றவதற்காக நிதியேற்பாடு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் ஏனைய செலவின விடயங்களிலிருந்து நி.பி.66 மூலமான மாற்றல்களின் ஊடாக நிதி பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது. |

**2.1 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம், பொறுப்புகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் அதற்கு போதியளவான நிதியேற்பாடு காணப்படுகின்றதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும், திணைக்களத்தினால் 05 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 2,458,932ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம், பொறுப்புகள் தொடர்பில் செயற்பட வேண்டும். | மதிப்பிடப்பட்டவாறு நிதியேற்பாடு கிடைக்காத போதிலும், அத்தியாவசியமான செலவினங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. விசேடமான அங்கவீனமுற்ற சிறார்கள் உள்ள நிறுவனங்களின் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் காரணமாக நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் 18 செலவின விடயங்களுக்காக ரூபா 2,944,805 கூட்டுப்பெறுமதியுடைய பொறுப்புகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியில் அனைத்து பொறுப்புகளும் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியமை. | 2019ஆம் ஆண்டின் போது லெுத்த முடியாதிருந்த செலவினங்கள் 2020ஆம் ஆண்டின் பெப்ரவரி 15ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும், அதுவரை சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டது. |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக இடமாற்றம் | முற்பணக் கணக்கின் கீழ் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| பெற்றுச்சென்ற, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 413,320 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 158,844 தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை கூடிய விரைவில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) போதைப்பொருள் மீட்பு மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமையால் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | திட்டங்களை தயாரித்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்த செயலாற்றல் திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்கப்படாமை மற்றும் செயற்திட்ட அறிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது சமூக சேவைகள் திணைக்களத்திற்குரிய தொழிற்பயிற்சி நிலையங்கள் 07 இற்கு 467 மாணவரகள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் பாடநெறிகளை பூர்த்தி செய்து பரீட்சைக்கு தோற்றாத மாணவர்களின் எண்ணிக்கை 185 ஆகும். | பயிலுர்கள் மற்றும் சமூகத்திற்கு தேவையான வகையில் பாடநெறிகள் கட்டமைக்கப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் பயிலுனர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட போதிலும், விடுமுறை காலங்களில் வீடுகளுக்கு சென்ற பின்னர் சில பயிலுநர்கள் மீள வருகை தரவில்லை. எதிர்காலத்தில் பயிலுநர்களின் பங்குபற்றலை மேம்படுத்துவதற்கு நடடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. |

அவர்களுள், 3 நிலையங்களில் பரீட்சைகளில் தோற்றாது பாடநெறியை கைவிட்டுச்சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்திற்கும் அதிகமாக காணப்பட்டது. இவ்வாறு பாடநெறிகளை விட்டுச் செல்வதங்கான காரணங்களை ஆராய்ந்து அவர்களை தங்கவைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழிசார் பயிற்சி நிலையங்களில் விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டிருந்த போதிலும், சமையலறைகள் நிர்மாணிக்கப்படாமையால் தங்குமிடத்துடனான பயிற்சி நடடவடிக்கைகளை மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்க முடியாதிருந்தது. இந்த இரு நிலையங்களில் விடுதி வசதியற்ற பயிற்சிகளுக்காக 2020ஆம் ஆண்டிற்காக 50 மாணவர்கள் வீதம் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள முடியாத காரணத்தால் 2020 திசெம்பர் 15ஆந் திகதி வரையிலும் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துக்கொள்ளக்கூடிய வகையில் நிர்மாணங்களை திட்டமிடல் மற்றும் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்பது. | நிதியேற்பாடுகளைள கவத்திற்கொண்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பயிற்சிப் பிரிவிற்காக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தினை கோரி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2019 ஒக்தோபர் 07ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும், இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் பெற்றிராத செயற்றிட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட செயலகத்தின் ஊடாக புவக்பிட்டிய மனநலம் குன்றிய பெண்களுக்கான காப்பகத்தினை நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்திற்காக 2018ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் ரூபா 44,775,816 செலவிடப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்தின் முதல் கட்டம் நிறைவடைந்திருந்த போதிலும், நீர்த்தாங்கி, சமையலறை, பாதுகாப்பு மதில், கிணறு மற்றும் மின்னல் பாதுகாப்பு கட்டமைப்பினை நிர்மாணித்தல் இரண்டாவது கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் முதல் கட்டத்தின் நிர்மாணங்கள் பயன்படுத்த முடியாததாக காணப்பட்டது. | நிதியேற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்த நடடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலத்தினை பரிசோதித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சமர்ப்பித்திருந்த போதிலும், அதற்காக கூடிய காலம் எடுக்கப்பட்டமையால் முதலாவது கட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2019 ஒக்தோபர் மாதம் 31ஆந் திகதியில் நிறைவடைந்திருந்த போதிலும், சில குறைபாடுகள் நிலவிய காரணத்தால் கட்டிடத்தினை பொறுப்பேற்றல் 2020 யூன் 15ஆந் திகதி வரையிலும் தாமதமடைந்திருந்தது. கொழும்பு மாவட்ட செயலகத்தினால் சமையலறையை நிர்மாணிப்பதற்காக முன்வைக்கப்பட்ட திட்டத்திற்காக 2019 யூன் மாதத்தின் போது ரூபா 28 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் போதுமான கால அவகாசம் கிடைக்காமையால் குறித்த பணியை மேற்கொள்ள முடியாதிருந்ததாக கொழும்பு மாவட்ட செயலகத்தின் பொறியியளாளர் தெரிவித்திருந்தார். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் இந்த திணைக்களத்திற்கு வெகுமதிகளாக சுமார் 50.93 ஏக்கர் பரப்பளவான காணித்துண்டுகள் 11 கிடைத்திருந்ததுடன், அவற்றுள் 24.27 ஏக்கர் பரப்பளவான 08 காணித் துண்டுகளின் உரித்தினை உரிய முறையில் சுவீகரிக்க முடியாதிருந்தது. அவ்வாறே, திணைக்களத்திற்கு 2013ஆம் ஆண்டின் போது வெகுமதி உரித்துறுதியின் மூலம் வழங்கப்பட்டிருந்த நுவரெலியா தெஹிகொல்ல காணிகள் மற்றும் வீடுகள் விளைவற்றுக் காணப்பட்டன. | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் உரித்தினை உரிய முறையில் சுவீகரிப்பதற்க மற்றும் அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமூக சேவைகள் திணைக்களத்திற்கு வெகுமதியாக கிடைத்திருந்த 15 காணிகளில் 03 காணிகளை சுவீகரிப்பதற்குரிய பணிகள் நிறைவடைந்துள்ளன. அவ்வாறே நுவரெலியா தெஹிகொல்ல காணிகளை பயன்படுத்தவும் செயற்திட்ட அறிக்கையொன்றை தயாரிக்குமாறு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடந்த வருடத்தின திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் 104 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 110 வரை அதிகரித்திருந்தது. இந்த வெற்றிடங்களில் உயர் மட்டத்திலான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்காக திணைக்களத்தினால் அரச | திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து 2018 திசெம்பர் மாதம் முதல் 2020 ஒக்தோபர் மாதம் வரையிலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், 2020 நவம்பர் மாதம் வரையிலும் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| (ஆ) | இரண்டாம் நிலையிலான 86 வெற்றிடங்களில், 13 தொழில்சார் விரிவுரையாளர்களுக்கும், 05 வீடமைப்பு நிர்வாகி பதவிகளும், 20 சைகை மொழிபெயர்ப்பாளர்களையும் ஆட்சேர்ப்பதற்கு திணைக்களத்தினால் அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து 2019 மார்ச் 19 மற்றும் 2019 ஏப்ரல் 10ஆந் திகதிகளில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், 2020 நவம்பர் மாதம் வரையிலும் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருக்கவில்லை. | திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |